OS.No.301/2020 – 26.09.2024

PW1 – கோவிந்தன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கை என்னுடைய தகப்பனார் தாக்கல் செய்தார் என்றால் சரி. அவர் இறந்துவிட்டதால் அவரது வாரிசு என்ற அடிப்படையில் நான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன். எதற்காக இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டது என்ற முழு விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். எனது தகப்பனார் லேவாதேவி தொழில் செய்து வந்தார் என்றால் சரி. அத்துடன் ஆட்டு வியாபாரமும் விவசாயமும் செய்து வந்தார். தாவா சொத்தை பொறுத்து எனது தகப்பனாரும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் கடந்த 09.11.2015ம் தேதி கடனுக்காக ஒரு கிரய ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றால் கடனுக்காக எழுதப்படவில்லை. மேற்படி கிரய ஒப்பந்தத்தில் கிரய காலம் எவ்வளவு என்றால் 30 மாதம் கிரய காலமாக சொல்லப்பட்டுள்ளது. இந்த கிரய ஒப்பந்தத்தை எனது தகப்பனாரும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் 09.04.2018ல் ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரி. அதே தேதியில் தாவா கிரய ஒப்பந்தமும் மறுபடியும் எழுதப்பட்டது என்றால் சரி. என்ன காரணத்திற்காக கிரய ஒப்பந்தப்பத்திரத்தை ரத்து செய்துகொண்டார்கள் என்று எனக்கு

தெரியாது எனக்குத் தெரியும். எதனால் ரத்து செய்தார்கள் என்றால் 1 முதல் 3 பிரதிவாதிகள் கூடுதல் தொகை கேட்டதால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மேற்படி விவரத்தை வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன். மேற்படி விவரத்தை வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றும் தற்போதுதான் முதன்முதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் 2011 ம் ஆண்டு முதலே கொடுக்கல் வாங்கல் இருந்து வந்தது என்றால் சரிதான். அந்த அடிப்படையில் 2 ம் பிரதிவாதி 19.2.2011 ம் தேதி ரூ,30,000/−மும் 3.4.2011 ம் தேதி ரூ.50,000/−மும், 4.3.2012 ம் தேதியில் ரூ.50,000/−மும், 12.4.2012 ம் தேதி ரூ.30,000/−மும் ஆக மொத்தம் ரூ.1,60,000/− எனது தகப்பனாரிடம் கடனாக பெற்றார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால் பணம் கொடுக்கல் வாங்கல் செய்து வந்தார். ஆனால் தொகை எவ்வளவு என்று தெரியாது.

மேற்சொன்ன தொகைக்குதான் மாத வட்டியாக ரூ.100 க்கு ரூ.3 வீதம் 2015 ம் ஆண்டு வரை வட்டி செலுத்தி வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அதற்கு பின்னிட்டு இந்த பிரதிவாதிகளால் சரியாக வட்டி கொடுக்க முடியாததால்தான் தாவா சொத்தை பொறுத்து கிரய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொண்டார்கள்

என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டும் வட்டி அதிகமானதால் 9.4.2018ம் தேதி ஏற்கனவே ஏழுதிய கிரய ஒப்பந்த பத்திரத்தை ரத்துசெய்துவிட்டு அன்றைய தினமே தாவா கிரய ஒப்பந்த பத்திரத்தை எழுதிப்பட்டது என்றால் சரியல்ல. தாவா கிரய ஒப்பந்த பத்திரம் கடன் நீட்டிப்பிற்காக எழுதப்பட்டது என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிகள் ரூ.2,00,000/- மட்டும்தான் என் தகப்பானருக்கு கடன் பாக்கியாக கொடுக்க வேண்டி உள்ளது என்றால் சரியல்ல. அதற்காகதான் தாவா கிரய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனார் இறந்தபிறகு எனக்கும் இந்த பிரதிவாதிகளுக்கும் வழக்கு தாக்கல் செய்த பிறகு எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்து எத்தனை இடங்களில் உள்ளது அதன் சர்வே எண் மற்றும் விஸ்தீர்ணம் சொல்ல முடியுமா என்றால் முடியும். 5 சர்வே எண்களில் சொத்து உள்ளது. மேற்படி சர்வே எண்.125//K. 125/H. 125/F மற்றும் சர்வே எண்.125/8சி, 125/8டி ஆகும். இந்த சொத்துக்களுக்கு சக்குபந்தி விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். ஒவ்வொரு சர்வே எண்களிலும் சக்குபந்தி சொல்லமுடியுமா என்றால் குறிப்பாக சொல்லமுடியாது. உண்மையாக கிரய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டிருந்தால் சர்வே எண்களுக்கு சக்குபந்தி தெரிந்திருக்கும் என்றும் கடனுக்காக கிரய ஒப்பந்தம் எழுதப்பட்டதால்தான் மேற்படி விவரம் எனக்கு தெரியவில்லை

என்றால் சரியல்ல.

தாவா சொத்து மொத்தம் எத்தனை செண்ட் என்றால் 47-1/2 செண்ட் ஆகும். தாவா சொத்து தோராயமாக ஒரு ஏக்கர் ரூ.1 கோடி வரை விலை போகிறது என்றால் சரிதான். தற்போது சாட்சி ரோட்டு மேல் ஒரு கோடி போகும் என்றும் ஆனால் தாவா சொத்து உள்ளடியாக உள்ளது என்று சொல்கிறார். கடனுக்காக கிரய ஒப்பந்தப்பத்திரம் எழுதப்பட்டதால்தான் தாவா சொத்தின் மதிப்பு குறைவாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அதுவும் இந்த குறைந்த விலைக்கு விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனவே தாவாப்படி எனக்கு தீர்ப்பு கிடைக்ககூடியதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

4,5 மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா கிரய ஒப்பந்த பத்திரம் எவ்வளவு கிரய தொகைக்கு எழுதப்பட்டது எவ்வளவு முன் தொகை கொடுக்கப்பட்டது மீதி எவ்வளவு தொகை கொடுக்கபபட வேண்டி உள்ளது என்றால் கிரய தொகை ரூ.9,50,000/- முன்தொகையாக ரூ.9,00,000/- கொடுக்கப்பட்டு மீதி தொகை ரூ.50,000/- கொடுக்க வேண்டி

இருந்தது. என் அப்பாவிற்கு 2 மனைவிகள் என்றால் சரி. முதல் மனைவி பெயர் சீரங்காயி. என் அப்பாவிற்கும் சீரங்காயிக்கும் பிறந்தவர்கள்தான் 4,5 பிரதிவாதிகள் என்றால் சரி. நான் எனது அப்பாவின் 2 வது மனைவி சீரங்கம்மாளின் மகன் என்றால் சரி. எனது அம்மா 1ம் வாதியின் சட்டப்படியான மனைவி இல்லை என்றால் சரியல்ல. முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே என் அப்பா என் தாயாரை வைத்திருந்ததால் என்னுடைய தாயார் என் தகப்பனாரின் சட்டப்படியான மனைவி இல்லை என்றால் சரியல்ல. என் அப்பா முதல் மனைவி இறந்தபிறகுதான் என் தாயாரை திருமணம் செய்து கொண்டார். என்னுடைய தாயார் என் தகப்பனாரின் சட்டப்படியான வாரிசு இல்லை என்பதால்தான் என் பெயர், என் தகப்பனாரின் வாரிசு சான்றிதழில் இடம் பெறவில்லை என்றால் சரியல்ல. தவறுதலாக என் தாயாரின் பெயர் வாரிசு சான்றிதழில் விடுபட்டுள்ளது. உள்ளூரில் தாசில்தார், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் முறையாக விசாரித்துதான் வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாசில்தார் அலுவலகத்திலும் ஆர்,டி.ஓ அலுவலகத்திலும் முதல் மனைவி இறந்தபிறகுதான் என் தாயாரை என் தகப்பனார் திருமணம் செய்து கொண்டதாக கடிதம் அனுப்பி உள்ளார்கள். அந்த கடிதத்தை நான் இதுவரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்

நீதிமன்றத்தில் கோரினால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

4,5 பிரதிவாதிகள் என் தாயார் சட்டப்படியான வாரிசு இல்லை என்று எதிர் வழக்காடி வரும் நிலையில் நானாக மேற்படி கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. உண்மையில் அவ்வாறான கடிதம் இருந்திருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறான கடிதம் இல்லை என்பதால்தான் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே 4,5 பிரதிவாதிகளுக்கும் 3,4 வாதிகளுக்கும் சமபாகம் கிடைக்கதக்கது என்றும் 2ம் வாதியான எனது தாயாருக்கு எந்த பாகமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.